1975 அக்டோபர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே,-என்னென்ன மசோதாக்கள் வரும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய அந்த வருத்தத்தை, கஷ்டத்தை நானும் உணர்கிறேன். ஆகவே, நேரத்திலே கிடைக்க இனிமேல் வழி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பத்திரிகை தணிக்கை முறை குறித்து.

திரு. பெ. சீனிவாசன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நேற்று அசெம்பிளியில் முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, சூசகமாக பத்திரிகைக் கட்டுப்பாடு பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் தினத்தந்தி பத்திரிகையில், கேஸ் லைட் பிரச்னை பற்றி அமைச்சர் மாதவன் பதில் என்று முழுவதும் போட்டிருக்கிறார்கள். அந்த செய்தியில், இதை ஏன் எதிர்க் கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது என்று சொன்னார் என்று போட்டிருக் கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்த்துப் பேசியதை அதிலே போடவில்லை. ஆகவே, இது ஒருபக்க நியாயமாக இருக்கிறது. ஆகவே, உங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது மாநில சர்க்காருக்கு மட்டுமல்ல, மத்திய சர்க்காரும் செய்கிறது என்று எங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அப்படியானால் மத்திய சர்க்காருக்கு எத்தனை சதவிகிதம், மாநில சர்க்காருக்கு எத்தனை சதவிகிதம். 'கோட் ஆஃப் காண்டக்ட்' என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதில் அதிகமாக நான் உரிமை எடுத்துக் கொண்டு சொல்ல முடியா விட்டாலும் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சென்சார்ஷிப் 'கோட்' வகுத்திருக்கிறது. Pre-Censorship என்று சில குறிப்பிட்ட விஷயத்தில் தங்களிடத்தில் காட்டிவிட்டு போட வேண்டுமென்று ஒரு முறை. சில பத்திரிகைகள், இன்னும் கொஞ்சம் ஜனநாயகரீதியில் முழு விஷயத்தையும் காட்டிவிட்டு, எல்லாவற்றையும் காட்டிவிட்டு,

'முரசொலி' என்றால் 'முரசொலி' என்ற தலைப்பு எழுத்திலிருந்து 'edited, printed and published by Maran' என்று இருக்கும் வரையிலும் காட்டிவிட்டுத்தான் பிறகு அவர்கள் வெளியிட வேண்டும்.

அதைப்போல் 'தினத்தந்தி' பத்திரிகை. 'கழகக் குரல்' என்று கட்சியினுடைய அதிகாரபூர்வமான பத்திரிகை. இன்னும் வேறு சில வார ஏடுகள் இவைகளுக்கெல்லாம் முழுமையாக, முதலிலிருந்து கடைசி வரை எழுத்து வாரியாக அவர்களிடத்தில் காட்டி சென்சார் ஆபீசர் 'டிக்' செய்து கொடுத்த பிறகுதான் போடலாம். அவர் எதை எதை போடக் கூடாது என்று அடித்து கையெழுத்துப் போடுகிறாரோ அதைப் போடக் கூடாது. மற்றப் பத்திரிகைகளுக்கு அப்படி அல்ல. மற்றப் பத்திரிகைகள் அசெம்பிளியைப் பொறுத்தவரை நடவடிக்கைக் குறிப்புகளை அவர்களிடத்தில் காட்ட வேண்டும், எதை எதைப் போடலாம் என்று அவர்கள் சொல்லுகிறார்களோ அவற்றை மட்டுந்தான் போடலாம் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தணிக்கைக்கு மத்திய சர்க்கார் பொறுப்பா? மாநில சர்க்கார் பொறுப்பா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தணிக்கையைப் பொறுத்தவரை மத்திய சர்க்கார்தான் பொறுப்பு.

திருமதி த. ந. அனந்தநாயகி: மத்திய சர்க்கார் பொறுப்பு என்று சொல்லுகிறீர்கள். ஆனால், குமுதத்தில் தணிக்கை, மக்கள் குரலில் அரசியல் நியூசுக்குத் தணிக்கை எல்லாம் யார் செய்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தணிக்கை செய்கிற பொறுப்பு மாநில அரசின் கையில் இல்லை. மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. மத்திய அரசை ஆண்டு கொண்டிருக்கிற கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் இதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே. இதிலே எந்த அளவுக்கு மத்திய அரசு பொறுப்பு, எந்த அளவுக்கு மாநில அரசு பொறுப்பு என்பதை விளக்க வேண்டும். 'ஜனசக்தி'

1975 அக்டோபர் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பத்திரிகைக்கு வந்திருந்த கடிதம் மாநில தணிக்கை அதிகாரியிடம் இருந்து வந்தது. "மொத்தமாக ஆட்சேபகரமான விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, இதைப் பறிமுதல் செய்வோம்' என்று சொல்லக்கூடிய அதிகாரம் மாநில சர்க்காருக்கு இருக்கிறதா அல்லது மத்திய சர்க்காருக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பறிமுதல் செய்யக்கூடிய அதிகாரம் மாநில சர்க்காருக்குத்தான் இருக்கிறது. அந்த வகையில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருந்தால் — கொள்கை மாறுபாடுகள், ஜனநாயக ரீதியில் கூறப்படுகிற வாதங்கள், இவைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை; எதையும் தாங்கிக் கொள்ள மாநில அரசும், ஆளும் கட்சியும் என்றைக்கும் தயங்கிய தில்லை—அபாண்டமான, ஆட்சேபகரமான, அவதூறான விஷயங்கள் இருந்தால் பறிமுதல் செய்கிற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** சார் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் வேறு எங்கோ போகிறது.

அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவுகள்—மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் . . . . .

### (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.